**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF AT ALANDUR**

**O.S.No: 105/2023**

Deposition of Witness for plaintiff/Defendant solemnly affirmed by Tmt. Thamizharasi, Head clerk (Deputation on Gr-III Bench Clerk) in accordance with the provisions of Act X of 1873 on 08.07.2026.

| | |
|---|---|
| சாட்சி எண் : **பி.வா.சா. 1** | வயது : 60 |
| பெயர் : சிராஜ் | தாலுகா : ஆலந்தூர் |
| கணவர் பெயர் : சனுவுல்லா அப்துல் ரஹீம் | |

பி.வா.சா.1 சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**விசாரணை தொடங்கும் நேரம் : 3.20 p.m** **நாள் : 08.07.2026.**

**பி.வா.சா.1 குறுக்கு விசாரணை :**

(1) பிரதிவாதி எனக்கு மகள். எதன் அடிப்படையில் மகளுக்காக சாட்சியம் அளிக்க வேண்டுமென்றால் எனது மகள் துபாயில் இருப்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி பிரதிவாதிகளுக்கு நிச்சயக்கப்பட்ட திருமணம் 05.02.2004 ல் நடந்தது. நிச்சயத்தார்த்தம் நடந்தது. நிச்சயதார்த்த சமயத்திலேயே வாதி துபாயில் வேலை செய்வது எங்களுக்கு தெரியும். திருமணத்திற்கு பிறகு துபாயில் சேர்ந்து வசிக்க போகும் விபரம் தெரியும். திருமணத்திற்கும், வரவேற்புக்கும் வாதி தான் செலவு செய்தார் என்றால் திருமணம் செலவு நாங்கள் செய்தோம். வரவேற்பு செலவு அவர்கள் செய்தார்கள்.

(2) திருமணத்தின் போது வாதி பிரதிவாதிக்கு 33 பவுன் நகை செய்தார் என்றால் 5 பவுன் செய்தார். திருமணத்திற்கு இருவரும் துபாயில் வசித்து வந்தார்கள்

என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வாதி தான் வேலை வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. பிரதிவாதியின் திறமையின் அடிப்படையில் தான் வாதி வேலை செய்து வந்த நிறுவனத்திலேயே வேலை கிடைத்தது.

(3) நான் துபாயில் உள்ள எனது மகள் வீட்டிற்கு சென்றேனா என்றால் எனது பேரக் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்பதால் அருகில் இருந்து பார்த்துக் கொள்வதற்காக சென்றேன். அதற்கான செலவுகளை வாதி செய்தார் என்றால் சரிதான். 19.02.2014 தேதியில் எனது பேரன் பிறந்தார் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே அடிக்கடி சண்டை வரும் என்றால் சரிதான்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

<u>விசாரணை முடிந்த நேரம் :</u> **3.35 p.m**

–